2023 ஜனவரி 11]

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

சார்நிலைக் கருவூலம்

*51733—**திரு. பொ. அர்ஜுனன்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக கருத்துரு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், அரசின் நிதி நிலைமை மற்றும் திட்டத்தின் செயல்படுத்தப்படும் தன்மை அறிந்து, திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடைக்கால பொதுச் செயலாளர், ஏழை எளிய மக்களின் அன்பைப் பெற்ற இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர், ஐயா அவர்களை*

வணங்குகிறேன். என் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான என் அரசியல் ஆசான், அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், இந்த அவையில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்த 13 வருவாய் வட்டங்களில் மரக்காணம் வட்டமும் ஒன்றாகும். விழுப்புரம் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதி முதல் மரக்காணம் வட்டம் அமையப் பெற்றுள்ளது. இதன் நிருவாகத் தலைமையிடம், வட்டாட்சியர் அலுவலகம், மரக்காணத்தில் இயங்குகிறது. மரக்காணம் வட்டம் 60 வருவாய்க் கிராமங்களைக் கொண்டது. இவ்வட்டத்தில் அமைந்த மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் 56 கிராம ஊராட்சிகளைக் கொண்டது. இங்குள்ள மக்கள், ஓய்வூதியதாரர்கள், அரசுப் பணியாளர்கள் பல்வேறு தேவைகளுக்கு சார்நிலைக் கருவூலத்தை அணுகவேண்டுமென்றால், நீண்டதூரமுள்ள திண்டிவனத்தில் அமைந்துள்ள கருவூலத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளதால் ஒரு நாள் முழுவதும் செலவாகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படும் என்ற அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில், மரக்காணம் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலுத்தும் முறையை, சென்ற அரசிலேயே அதனை தொழில்நுட்பம் மூலமாக automation செய்து—அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட—இன்றைக்கு அனைத்து தேவைகளுக்கும் வங்கியின் மூலம் ஊதியம் அனுப்பப்பட்டு, SMS மூலமாகத் தகவல் அனுப்பப்பெற்று, அவற்றில் ஏதேனும் பிரச்சினை வந்தால், help desk–ஐ அழைக்கும்வகையிலும், pay slip–ல் எந்த அடிப்படையில்—TDS குறைக்கப்பட்டது போன்ற அனைத்து தகவல்களையும் பொதுமக்கள் online மூலமே பெறுமாறு, phone–லேயே தட்டியவுடன் கிடைக்குமாறு செய்திருக்கிறோம்.

2023 ஜனவரி 11]

அதுமட்டுமல்லாமல், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை Life Certificate *வழங்குதல், மக்கள் அலுவலகத்திற்குச் செல்லும் தேவை இல்லாமல் அவரவர்கள் இல்லத்திலேயே* Postal Service Bank*–ஐ ஒப்பந்தம் போட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் வீட்டிலிருந்தே* Digital Certificate *கொடுத்துவிட்டால், அவர்கள் அலுவலகத்திற்கு வரும் வாய்ப்பே எழவில்லை. எனவே, பொதுவாக மக்கள் அரசை தேடிவரத் தேவையில்லாதவகையில்,* online *மூலம் அல்லது அரசே மக்களைத் தேடிச் சென்று சேவை செய்யும் வகையில்தான் நாங்கள் பணிகளை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறோம். இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் தகவலின் அடிப்படையில், மற்றொரு முறை பரிசீலனை செய்து, அங்கு சேவைகள் குறைவாக இருந்து, தேவைகள் அதிகமாக இருக்குமேயானால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விரைவாகச் செயல்படுத்துமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 5 முதல் 7 வரை)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.* (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

@ *197 முதல் 551 வரையிலான பக்கங்களில் இணைப்பு* I *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *552 முதல் 863 வரையிலான பக்கங்களில் இணைப்பு* II *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*